


நல்லவே எண்ணல் வேண்டும்..,

# சக்கர வியூகம்

எண்ணிய முடிதல் வேண்டும்..,

தினசரி நாளிதழ் "தேமதுரத் தமிழோசை உலகமெலாம்" DAILY NEWS PAPER

★SAKKRA VIYUGAM★

இணையத்தில் வாசிக்க..,

Website: www.sakkraviyugam.com PRGI:TNTAM/25/A1018 Email: sakkraviyugam@gmail.com

| VOLUME : 01 | ISSUE: 98 | 03.10.2025 | FRIDAY | PURATTASI : 17 | PRICE : RS.5/- |
|---|---|---|---|---|---|
| மலர் : 01 | இதழ் : 98 | 03.10.2025 | வெள்ளிக்கிழமை | புரட்டாசி : 17 | விலை : ரூ.5/– |

3 "தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது" கரூர் சம்பவத்தில் ஸ்டாலின் மீது பழனிசாமி சாடல்

4 திருப்பூரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் மகாத்மா காந்தி சிலை முன்பு உறுதிமொழி ஏற்பு

2 கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கு: திருவண்ணாமலை போலீஸார் இருவர் பணி நீக்கம்

# "விடுதலைக்காக ஆர்எஸ்எஸ் தலைவர்கள் சிறை சென்றனர்" நூற்றாண்டு நிறைவு விழாவில் பிரதமர் மோடி நெகிழ்ச்சி

புதுடெல்லி: அக்.3-

"ஆர்எஸ்எஸ் தொடங்கப்பட்டதிலிருந்து, தேசத்தைக் கட்டியெழுப்ப பாடுபட்டு வருகிறது. சுதந்திரப் போராட்டத்தின் போது, ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் டாக்டர் கே.பி ஹெட்கேவர் சிறைக்குச் சென்றார். அவருடன், அமைப்பின் பல தலைவர்களும் சிறைக்குச் சென்றனர்" என்று பிரதமர் மோடி தெரிவித்தார்.

ராஷ்ட்ரிய ஸ்வயம்சேவக சங்கத்தின் நூற்றாண்டு விழா புதுடெல்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் இன்று கொண்டாடப்பட்டது. இதில் பிரதமர் நரேந்திர மோடி தலைமை விருந்தினராக பங்கேற்றார்.

இந்நிகழ்ச்சியில் ஆர்எஸ்எஸ் அமைப்பு நாட்டுக்கு அளித்த பங்களிப்பை எடுத்துக்காட்டும் வகையில் பிரத்யேகமாக வடிவமைக்கப்பட்ட சிறப்பு அஞ்சல் தலை மற்றும் நினைவு நாணயத்தை பிரதமர் மோடி வெளியிட்டார்.

பின்னர் அவர் பேசியதாவது: "ஆர்எஸ்எஸ் அமைப்பின் 100 ஆண்டுகால மகத்தான பயணம் என்பது தியாகம், தன்னலமற்ற சேவை, தேசத்தைக் கட்டியெழுப்புதல் மற்றும் ஒழுக்கத்திற்கு ஒரு அசாதாரண எடுத்துக்காட்டு. நாளை விஜயதசமி. இது தீமைக்கு எதிரான நன்மையின் வெற்றி, அநீதிக்கு எதிரான நீதியின் வெற்றி, பொய்களுக்கு எதிரான உண்மையின் வெற்றி, இருளுக்கு எதிரான ஒளியின் வெற்றி ஆகியவற்றைக் குறிக்கும் ஒரு பண்டிகை. 100 ஆண்டுகளுக்கு முன்பு தசராவில் ஆர்எஸ்எஸ் நிறுவப்பட்டது வெறும் தற்செயல் நிகழ்வு அல்ல. இது ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடரும் ஒரு பாரம்பரியத்தின் மறுமலர்ச்சி. சங்கத்தின் நூற்றாண்டு விழாவைக் காணும் அதிர்ஷ்டம் நமக்கு கிடைத்திருக்கிறது.




இந்திய வரலாற்றில் பாரத மாதாவின் உருவம் ஒரு நாணயத்தில் செதுக்கப்படுவது இதுவே முதல் முறை. இந்த நாணயத்தில் ஆர்.எஸ்.எஸ் அமைப்பின் "ராஷ்ட்ரே ஸ்வாஹா, இதம் ராஷ்ட்ரய, இதம் ந மாமா" என்ற ஸ்லோகமும் இடம்பெற்றுள்ளது. இதன் அர்த்தம் "அனைத்தும் தேசத்திற்கு அர்ப்பணம், அனைத்தும் தேசத்துகு, எதுவும் என்னுடையது அல்ல" என்பதாகும்.

ஆர்.எஸ்.எஸ். தொடங்கப்பட்டதிலிருந்து, தேசத்தைக் கட்டியெழுப்ப பாடுபட்டு வருகிறது. சுதந்திரப் போராட்டத்தின் போது, ஆர்.எஸ்.எஸ். நிறுவனர் டாக்டர் கே.பி ஹெட்கேவர் சிறைக்குச் சென்றார். அவருடன், அமைப்பின் பல தலைவர்களும் சிறைக்குச் சென்றனர்.

சுதந்திரத்திற்குப் பிறகு, ஹைதராபாத் நிஜாம்களின் கைகளில் ஆர்.எஸ்.எஸ். மீண்டும் சிக்கி துன்பப்பட்டது. கோவா மற்றும் தாத்ரா மற்றும் நாகர் ஹவேலியின் சுதந்திரத்தின் போதும் ஆர்.எஸ்.எஸ். தியாகம் செய்தது. ஆனால் ஆர்.எஸ். எஸ். தனது நம்பிக்கையில் உறுதியாக இருந்தது: 'முதலில் தேசம்' மற்றும் 'ஒரே பாரதம், சிறந்த பாரதம்' என்பதே அதன் நோக்கம்.

ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பு அமைப்புகளின் மீது ஆர்.எஸ்.எஸ். தொண்டர்கள் கொண்டிருந்த அசைக்க முடியாத நம்பிக்கை ஒருபோதும் கசப்புணர்வை ஏற்படுத்தவில்லை. அது அவசரநிலையை எதிர்ப்பதற்கான பலத்தை மட்டுமே அவர்களுக்கு தொடர்ந்து அளித்தது.

சுதந்திரத்திற்குப் பிறகும் கூட, ஆர்.எஸ்.எஸ் அமைப்பை நசுக்க முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. ஆர்.எஸ்.எஸ். மைய நீரோட்டத்திற்கு வருவதைத் தடுக்க எண்ணற்ற சதித்திட்டங்கள் இருந்தன. சில சமயங்களில் நாம் தற்செயலாக நம் பற்களால் நாக்கைக் கடிக்கிறோம் அல்லது நசுக்குகிறோம். ஆனால் அதற்காக நாம் பற்களை உடைக்க வேண்டும் என்று அர்த்தமல்ல. அமைப்புக்கு எதிரான அனைத்து தடைகள் மற்றும் சதித்திட்டங்கள் இருந்தபோதிலும், ஆர்.எஸ். எஸ் யாரையும் ஒருபோதும் வெறுக்கவில்லை. ஏனென்றால் நாம் சமூகத்திலிருந்து வேறுபட்டவர்கள் அல்ல, அதன் ஒரு பகுதியினர் என்பதை நாம் அறிவோம். ஆர்.எஸ். எஸ். ஸ்வயம்சேவகர்களுக்கு நாட்டின் அரசியலமைப்பு நிறுவனங்கள் மீது அசைக்க முடியாத நம்பிக்கை உள்ளது" இவ்வாறு பிரதமர் மோடி தெரித்தார்.



## அலங்காநல்லூரில் காங்கிரஸ் கட்சியின் சார்பில்

# பாஜக மற்றும் தேர்தல் ஆணையம் இணைந்து நடத்தும் ஓட்டு திருட்டு எதிராக கையெழுத்து இயக்கம்

அலங்காநல்லூர். அக்.03

மதுரை மாவட்டம் அலங்காநல்லூரில் மகாத்மா காந்தியின் 157 வது பிறந்தநாள் விழா முன்னாள் பாரத பிரதமர் லால் பகதூர் சாஸ்திரியின் பிறந்தநாள், மற்றும் கர்மவீரர் காமராஜர் அவர்களின் நினைவு தினம் மற்றும் ஜனநாயகம் காப்பதற்காக பாஜக மற்றும் தேர்தல் ஆணையம் இணைந்து வாக்குத் திருட்டில் ஈடுபட்டதாக கூறி மாபெரும் கையெழுத்து இயக்கம் காங்கிரஸ் கட்சியில் சார்பில் வடக்கு மாவட்ட தலைவர் ஆலத்தூர் ரவிச்சந்திரன், தலைமையில் நடந்தது. முன்னதாக வன்முறை எதிர்ப்பு உறுதிமொழி தீண்டாமை எதிர்ப்பு உறுதிமொழி எடுக்கப்பட்டது. இதில் வட்டாரத் தலைவர்கள் சுப்பாராயலு, காந்தி, ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

சிறப்பு அழைப்பாளர்கள் மாநில பொதுக்குழு உறுப்பினர் நூர்முகமது, அமைப்புசாரா தொழிலாளர் மாநிலத் தலைவர் மகேஸ்வரன்,

மதுரை புறநகர் மாவட்ட தலைவர் அமைப்புசாரா தொழிலாளர் தலைவர் சோனைமுத்து, மாவட்ட இளைஞர் காங்கிரஸ் தலைவர் மணிவண்ணன், வட்டார தலைவர்கள் சண்முகசுந்தரம், சிவராமன், மகாதேவன், முருகானந்தம் மாவட்ட பொதுச்செயலாளர் ராமமூர்த்தி, அமைப்புசாரா மாநில துணைச் செயலாளர் ஜெயராமன், ஒன்றிய துணைத் தலைவர் திரவியம்,ஒன்றிய செயலாளர்

மலைராஜன், அமைப்புசாரா வட்டார தலைவர் முத்து, மற்றும் நிர்வாகிகள் தர்மராஜா, வட்டாரத் துணைச் செயலாளர் முருகன், கொண்டையம்பட்டி கிராம கமிட்டி தலைவர் முருகன், எஸ் டி எஸ் சி பிரிவு ஒன்றிய தலைவர் பாலமுருகன், மாவட்ட ஊடகப்பிரிவு தலைவர் கௌதம் பலா, மலைச்சாமி, செயது , ராமச்சந்திரன், பிச்சை கியாஸ் சேகர், பாஸ்கர், சேதுபதி, இனைச் செயலாளர் கண்ணுச்சாமி, வட்டாரப் பிரதிநிதி முத்தன். உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.நிகழ்ச்சியின் முடிவில் பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

# சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் வித்யாரம்பம் விஜயதசமியை முன்னிட்டு குழந்தைகளை சேர்க்க பெற்றோர்கள் குவிந்தனர்

## பள்ளி முதல்வர் திலகம் தனது மடியில் குழந்தைகளை அமர வைத்து நெல்மணிகளில் தமிழ் முதல் எழுத வைத்து இனிப்புகள் கொடுத்து வாழ்த்தினார்


சின்னாளபட்டி, அக்.03

சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டு நடைபெறும் வித்யாரம்பத்தில் தங்கள் குழந்தைகளை சேர்க்க பெற்றோர்கள் குவிந்த வண்ணம் இருந்தனர் பள்ளி முதல்வர் திலகம் தனது மடியில் குழந்தைகளை அமர வைத்து நெல்மணிகளில் எழுத வைத்து இனிப்புகள் கொடுத்து வாழ்த்தினார்

திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி பைபாஸ் சாலையில் அமைந்துள்ளது சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி. இப்பள்ளியில் தங்கள் பிள்ளைகளை 1 முதல் 12 வகுப்பு வரை சேர்த்து படிக்க வைக்க பெற்றோர்கள் அதிக அளவில் ஆர்வம் காட்டி வருவது வழக்கம் குறிப்பாக ஆத்தூர் தொகுதியில் தொடர்ந்து 19 வருடங்களாக 12ம் வகுப்பு பொதுத்தேர்வில் 100 சதவிகிதம் தேர்ச்சி பெற்றும் 10ம்வகுப்பு பொதுத்தேர்வில் 21வருடங்களாக 100சதவீதம் தேர்ச்சி அடைந்து வரலாற்று சாதனை படைத்த



சின்னாளபட்டி சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் தங்கள் பிள்ளைகளை சேர்க்க பெற்றோர்கள் ஆர்வம் காட்டுவது வழக்கம். இவ்வருடம் விஜயதசமி அன்று நடைபெற்ற வித்யாரம்பத்தில் தங்கள் குழந்தைகளை சேரன் வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளியில் சேர்க்க பெற்றோர்கள் பள்ளிக்கு வந்த வண்ணம் இருந்தனர். பள்ளி முதல்வர் திலகம் அறைக்கு வந்த குழந்தைகளை தனது மடியில் அமர வைத்து நெல் மணிகளில் தமிழில் முதல் எழுத்தை எழுத வைத்து அவர்களை வாழ்த்தி இனிப்புகளை வழங்கினார். சின்னாளபட்டி, சித்தையன்கோட்டை, அய்யம்பாளையம், வக்கம்பட்டி, வீரக்கல், சீவல்சரகு, போடிகாமன்வாடி, அம்பாத்துரை, காந்திகிராமம், பிள்ளையார்நத்தம், கொடைரோடு, ஆத்தூர் ஆகிய ஊர்களிலிருந்து பெற்றோர்கள் தங்கள் பிள்ளைகளை சேர்க்க பள்ளிக்கு வந்தவண்ணம் இருந்தனர். இதுகுறித்து பள்ளி அறங்காவலரும் பொருளாளரும் முதல்வருமான என்.திலகம் கூறுகையில் எங்கள் பள்ளி 100சதவீதம் பெண் ஆசிரியைகளை கொண்டு செயல்பட்டு வருகிறது. பெண் குழந்தைகளுக்கு பாதுகாப்பான பள்ளி என்பதால் தங்களது பெண் குழந்தைகளை எங்கள் பள்ளியில் சேர்த்து படிக்க வைக்க பெற்றோர்கள் விரும்புவார்கள் என்றார். வித்யாரம்பம் விழாவிற்கான ஏற்பாடுகளை சேரன்வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப்பள்ளி நிர்வாக அறங்காவலர் எம்.சிவக்குமார், அறங்காவலரும் பொருளாளருமான என்.திலகம், அறங்காவலர்கள் ஜே.ஆல்பிரட்எங், பி.பாரதிராஜா, எஸ்.அபிசேக், உதவி தலைமையாசிரியை வெண்ணிலா, மற்றும் பள்ளி ஆசிரியைகள் சிறப்பாக செய்திருந்தனர்.



## திருப்பூரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில்

# மகாத்மா காந்தி சிலை முன்பு உறுதிமொழி ஏற்பு

திருப்பூர் மாநகராட்சி முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தி அடிகளின் திருவுருவச் சிலைக்கு இன்று காலை 10:30 மணி அளவில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதையும் மற்றும் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்டத் தலைவர் பி.ஆர்.நடராஜன், மாவட்ட செயலாளர் ஏ.வி. பழனிச்சாமி, மாநிலத் துணைச் செயலாளர் த.சசிகலா, ஆசிரியர்கள் மேரி நிர்மலா, மேரி ரோஸ்லின், பி.சி.ராஜேந்திரன் மற்றும் தமிழரசி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.



## அ.இ.அ.தி.மு.க திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம் உடுமலைப்பேட்டை சட்டமன்ற தொகுதி சட்டமன்ற அலுவலகத்தில் ஆயுதபூஜை விழா

திருப்பூர், அக்.03-

அ.இ.அ.தி.மு.க திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்டம் உடுமலைப் பேட்டை சட்டமன்ற அலுவலகத்தில் ஆயுதபூஜை விழா முன்னாள் வீட்டுவசதி, நகர்ப்புற வளர்ச்சித்துறை மற்றும் கால்நடை பராமரிப் புத்துறை அமைச்சரும், திருப்பூர் புறநகர் மேற்கு மாவட்ட கழக செயலாளரும், உடுமலைப்பேட்டை சட்டமன்ற உறுப்பினருமான உடுமலை கே.ராதாகிருஷ்ணன் அவர்களின் தலைமையில் கொண்டாடப்பட்டது. இந்நிகழ்ச்சியில் உடுமலை நகர கழக செயலாளர் ஹக்கிம், மாநில இளைஞர், இளம் பெண்கள் பாசறை இணைச் செயலாளர் காரத்தொழுவு சுரேஷ் பொன்முத்துலிங்கம், மாவட்ட சார்பு அணி செயலாளர்கள் எஸ்.எம். நாகராஜ், துபாய் ஆறுமுகம், பிரகாஷ், ருத்ரேஸ்வரன், மாவட்ட சார்பு அணி நிர்வாகிகள் அம்மாபட்டி துரைசாமி, வனிதாமணி, நாகூர் மீரா, குடிமங்கலம் மேற்கு ஒன்றிய கழக செயலாளர்கள் அன்பர் ராஜன், பொள்ளாச்சி வடக்கு ஒன்றிய கழக செயலாளர் ஆவல்பட்டி நடராஜ், உடுமலை நகர கழக நிர்வாகிகள் சரண்யாதேவி, விஸ்வநாதன், குடிமங்கலம் ஒன்றியம் விஸ்வநாதன், ஜனார்த்தனன், சுப்பிரமணி, கருப்புச்சாமி, உடுமலை நகர கழக வார்டு செயலாளர்கள் காளிதாஸ், கார்த்திகேயன், மினிடோர் சுப்பிரமணி, காமாட்சிகுமார், லிமிசி சின்னச்சாமி, சாமி (எ) சிவராஜ், ரங்கராஜன், குண்டு முருகன், செல் சேகர், இளங்கோவன், வெள்ளிங்கிரி, முன்னாள் அண்ணா தொழிற்சங்க தலைவர் பழனிச்சாமி, அஇஅதிமுக நகர மன்ற உறுப்பினர் சகுந்தலா மதிவாணன் மற்றும் அண்ணா ஆட்டோ தொழிற்சங்க நிர்வாகிகள் ரமேஷ், கழக நிர்வாகிகள் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள் ஆயுதபூஜை நிகழ்ச்சியில் கலந்து கொண்டனர்.

## குலசேகரன்பட்டினம் தசரா விழாவில் மகிஷா சூரசம்ஹாரம் ‘ஓம் காளி, ஜெய்காளி’ கோஷத்துடன் பக்தர்கள் தரிசனம்





தூத்துக்குடி, அக்.03-

குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயில் தசரா திருவிழாவில் சிகர நிகழ்ச்சியான மகிஷா சூரசம்ஹாரம் நள்ளிரவு கடற்கரையில் நடைபெற்றது. விரதம் கடை பிடித்து வேடம் அணிந்து வந்திருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் பக்தி பரவசத்துடன் தரிசனம் செய்தனர்.

தசரா திருவிழா: இந்தியாவில் கர்நாடக மாநிலம் மைசூர் சாமுண்டீஸ்வரி கோயிலுக்கு அடுத்தபடியாக குலசேகரன்பட்டினம் முத்தாரம்மன் கோயிலில் தசரா திருவிழா மிகவும் விமரிசியைக நடைபெறும். இக்கோயிலில் இந்த ஆண்டு தசரா திருவிழா கடந்த 23ம் தேதி கொடியேற்றத்துடன் தொடங்கியது. தொடர்ந்து காப்பு கட்டி விரதம் கடைபிடித்த பக்தர்கள் பல்வேறு வேடங்களை அணிந்து கடந்த 10 நாட்களாக வீதி தோறும் சென்று கலை நிகழ்ச்சிகளை நடத்தி அம்மனுக்கு காணிக்கை வசூலித்தனர்.

குலசேகரன்பட்டினம் கோயிலில் தினமும் காலை 8 மணி முதல் இரவு 8 மணி வரை முத்தாரம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன. இரவு 10 மணிக்கு அம்மன் பல்வேறு திருக்கோலங்களில், பல்வேறு வாகனங்களில் எழுந்தருளி வீதியுலா வந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தார்.

மகிஷா சூரசம்ஹாரம்: விழாவின் சிகர நிகழ்ச்சியான மகிஷாசூரசம்ஹாரம் நள்ளிரவு கோயில் அருகே உள்ள கடற்கரையில் நடந்தது. இதை காண நேற்று மாலையில் இருந்தே பல்வேறு வாகனங்களில் பக்தர்கள் குலசேகரன் பட்டினத்துக்கு வரத் தொடங்கினர். சுவாமி தரிசனம் செய்ய வசதியாக கோயிலில் பக்தர்கள், தசரா குழுவினர் செல்வதற்கு தனியாக பாதைகள் அமைக்கப்பட்டிருந்தன. குலசேகரன்பட்டினம் புறவழிச் சாலையின் அருகில் உள்ள தருவைகுளம் நேற்று காலை முதலே வாகனங்களால் நிரம்பியது.

தசரா திருவிழாவில் 10ம் நாளில், காலை 6 மணி, மற்றும் 8 மணிக்கு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள், 10.30 மணிக்கு மகா அபிஷேகமும் நடைபெற்றது. இரவு 11 மணிக்கு சிறப்பு அலங்கார பூஜை நடந்தது. இதனை தொடர்ந்து நள்ளிரவு 12 மணிக்கு மேல் சிம்ம வாகனத்தில் கடற்கரை சிதம்பரரேஸ்வரர் கோயில் முன்பாக அம்மன் எழுந்தருளி பல்வேறு வேடங்களில் வந்த மகிஷாசூரனை வதம் செய்தார்.


அப்போது கடற்கரையில் திரண்டிருந்த லட்சக்கணக்கான பக்தர்கள் விண்ணதிர ‘தாயே முத்தாரம்மா’, ‘ஓம் காளி, ஜெய்காளி’, ‘வெற்றி அம்மனுக்கே’ என முழக்கமிட்டு தரிசனம் செய்தனர். பின்னர் கடற்கரை மேடை, சிதம்பரரேஸ்வரர் கோயில், அபிஷேக மேடை மற்றும் கோயில் கலையரங்கில் அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், ஆராதனைகள் நடைபெற்றன.

நாளை நிறைவு: நாளை (அக்.3ம் தேதி) காலை 6 மணிக்கு அம்மன் பூஞ்சப் பரத்தில் திருவீதியுலா புறப்படுகிறார். மாலை 4 மணிக்கு அம்மன் கோயிலை வந்தடைந்தவுடன் பக்தர்கள் காப்பு அவிழ்த்து தங்கள் வேடங்களை களைந்து விரதத்தை நிறைவு செய்கின்றனர். நாளை நள்ளிரவு 12 மணிக்கு அம்மனுக்கு சேர்க்கை அபிஷேகம் நடைபெறு கிறது.

தசரா விழாவை முன்னிட்டு தூத்துக்குடி, திருநெல்வேலி மாவட்டங்களில் உள்ள பல்வேறு ஊர்களில் இருந்து குலசேகரன்பட்டினத்துக்கு சிறப்பு பேருந்துகள் இயக்கப்பட்டன. குலசேகரன்பட்டினத்தில் பக்தர்களுக்கு செய்யப் பட்டுள்ள ஏற்பாடுகளை நேற்று மாவட்ட ஆட்சியர் க.இளம்பகவத் பார்வையிட்டு அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கினார்.

நெல்லை சரக டிஐஜி (பொறுப்பு) சந்தோஷ் ஹாதிமணி , மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆல்பர்ட் ஜான் ஆகியோர் தலைமையில் 3,500 போலீஸார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டனர்.

## கூட்டு பாலியல் வன்கொடுமை வழக்கு: திருவண்ணாமலை போலீஸார் இருவர் பணி நீக்கம்





திருவண்ணாமலை, அக்.03-

திருவண்ணாமலையில் ஆந்திர மாநில இளம் பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கிய இரண்டு போலீஸார் பணியில் இருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

ஆந்திர மாநிலத்தில் இருந்து வாழைத்தார் ஏற்றிய சரக்கு வாகனம் கடந்த மாதம் 29ம் தேதி திருவண்ணாமலைக்கு வந்துள்ளது. அந்த வாகனத்தின் ஓட்டுநரின் உறவினர்களான தாயும், மகளும் அவருடன் அண்ணாலையார் கோயிலுக்கு செல்வதற்காக உடன் வந்துள்ளனர். ஏந்தல் புறவழிச்சாலை அருகே நள்ளிரவு 2 மணியளவில் வந்தபோது ரோந்து போலீஸார் அந்த வாகனத்தை நிறுத்தி விசாரித்துள்ளனர். மேலும், பெண்கள் இருவரையும் விசாரணைக்காக போலீஸார் அழைத்துச் சென்றுள்ளனர்.

அப்போது, ஏந்தல் அருகே ஆள் நடமாட்டம் இல்லாத இடத்தில் தாய் கண்முன்னே சுமார் 25 வயதுள்ள இளம் பெண்ணை போலீஸார் இருவரும் பாலியல் வன்கொடுமை செய்து ள்ளனர். பின்னர், அவர்களை புறவழிச்சாலை அருகே விட்டுவிட்டு சென்றுள்ளனர். அதிகாலை 4 மணியளவில் அழுதுகொண்டிருந்த இரண்டு பெண்களையும் அந்த வழியாகச் சென்ற பொதுமக்கள் மீட்டு 108 ஆம்புலன்ஸ் மூலம் திருவண்ணாமலை அரசு மருத்துவ கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.

அங்கு பாதிக்கப்பட்ட இளம்பெண்ணிடம் எஸ்பி சுதாகர் விசாரணை நடத்தினார். அதில், ஆந்திர மாநிலத்தைச் சேர்ந்த இளம்பெண்ணை பாலியல் வன்கொடுமைக்கு ஆளாக்கியது திருவண்ணாமலை கிழக்கு காவல் நிலைய இரண்டாம் நிலை காவலர் சுரேஷ்ராஜ் மற்றும் முதல் நிலை காவலர் சுந்தர் என்று தெரியவந்தது. அவர்கள் மீது 68 (b), 70 (i), 87, 115 (2) பிஎன்எஸ் பிரிவுகளின் கீழ் அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் வழக்குப் பதிவு செய்யப்பட்டு கைது செய்யப்பட்டனர்.

இந்த விவகாரம் தெடர்பாக வடக்கு மண்டல ஐஜி அஸ்ரா கர்க் நேரில் விசாரணை நடத்தினார். தொடர்ந்து, இருவரையும் சஸ்பெண்ட் செய்து எஸ்பி சுதாகர் உத்தரவிட்ட நிலையில் போலீஸார் சுரேஷ்ராஜ் மற்றும் சுந்தர் ஆகியோரை பணியில் இருந்து நிரந்தரமாக நீக்கி (டிஸ்மிஸ்) எஸ்பி சுதாகர் உத்தரவிட்டுள்ளார். இது தொடர்பாக திருவண்ணாமலை மாவட்ட காவல் துறையில் இருந்து செய்திக் குறிப்பையும் வெளியிட்டுள்ளனர்.

## தலைதூக்கும் சோயாபீன்ஸ் விவகாரம்: விரைவில் சீன அதிபரை சந்தித்து பேசும் ட்ரம்ப்

விரைவில் சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்து சோயா பீன்ஸ் விவகாரம் குறித்து பேச இருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரம்ப் தனது ட்ரூத் சோஷியல் பக்கத்தில் “சீனா பேச்சுவார்த்தை காரணங்களுக்காக மட்டுமே நம்மிடமிருந்து சோயாபீன்ஸ் வாங்காமல் இருப்பதால், நம் நாட்டின் விவசாயிகள் கடுமையாக பாதிக்கப்படுகிறார்கள். வரிகளின் மூலம் நாம் நிறைய பணம் சம்பாதித்துள்ளோம். அந்தப் பணத்தில் ஒரு சிறிய பகுதியை கொண்டு நம் விவசாயிகளுக்கு உதவப் போகிறோம். நான் ஒருபோதும் நம் விவசாயிகளை கைவிட மாட்டேன்.

தூக்கத்தில் இருந்த ஜோ பைடன் சீனாவுடனான நம் ஒப்பந்தத்தை அமல்படுத்தவில்லை. அவர்கள் நமது பண்ணை உற்பத்தியில் பில்லியன் கணக்கான டாலர் மதிப்புள்ள பொருட்களை வாங்க இருந்தனர், குறிப்பாக சோயாபீன்ஸ். அனைத்தும் நன்றாக நடக்கும். நான் நமது தேசபக்தர்களை நேசிக்கிறேன். ஒவ்வொரு விவசாயியும் அப்படித்தான். நான் நான்கு வாரங்களில் சீன அதிபரை சந்திக்க உள்ளேன். சோயாபீன்ஸ் அதில் ஒரு முக்கிய விவாதப் பொருளாக இருக்கும். சோயாபீன்ஸ் மற்றும் பிற பயிர்களை மீண்டும் சிறப்பாக மாற்றுவோம்” என்று ட்ரம்ப் தெரிவித்தார்.

முன்னதாக சீன பொருட்களுக்கான வரியை 145 சதவீதமாக உயர்த்தி ட்ரம்ப் உத்தரவிட்டார். இதனைத் தொடர்ந்து இதற்கு பதிலடி கொடுக்கும் வகையில் பல்வேறு நடவடிக்கைகளை சீனா மேற்கொண்டது. இதில் முக்கியமானதாக, அமெரிக்க விவசாய ஏற்றுமதியின் மையப் பொருளான சோயாபீன்ஸ் உள்ளிட்ட அமெரிக்க பண்ணை பொருட்களின் கொள்முதலை சீனா குறைத்தது. கடந்த ஏப்ரல் மாதத்திலிருந்து சீனா அமெரிக்க சோயாபீன்களை வாங்கவில்லை என்று கூறப்படுகிறது. இது அமெரிக்க விவசாயிகள் மத்தியில் கடும் பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

## “செந்தில் பாலாஜியின் பதற்றம் சந்தேகத்தை எழுப்புகிறது”- அண்ணாமலை





சென்னை, அக்.03-

நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், செந்தில் பாலாஜி இத்தனை பதட்டப்படுவதுதான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறத என முன்னாள் தமிழக பாஜக தலைவர் அண்ணாமலை தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், “கரூர் தவெக பொதுக்கூட்டத்தில், கூட்ட நெரிசலில் சிக்கி, பொதுமக்கள் உயிரிழந்தது குறித்து, தேசிய ஜனநாயக கூட்டணியின் எம்பிக்கள் குழு, பாதிக்கப்பட்ட பொதுமக்களைச் சந்தித்து, இந்த துயர நிகழ்வு தொடர்பான விசாரணை, பதவியிலிருக்கும் உச்சநீதிமன்ற நீதிபதி தலைமையில் நடைபெற, பரிந்துரைத்துள்ளது.

இந்த நிலையில் இன்று ஊடகங்களைச் சந்தித்த கரூர் திமுக சட்டமன்ற உறுப்பினரும் முன்னாள் சாராய அமைச்சருமான செந்தில் பாலாஜி, புதிய கதைகளைக் கூறியுள்ளார். தவெக சார்பில், சிபிஐ விசாரணை கோரிய வழக்கு, வரும் வெள்ளிக்கிழமை விசாரணைக்கு வரவிருக்கிறது. கூட்டத்தில்,விஜய் மீது செருப்பு வீச்சு உள்ளிட்ட அசம்பாவிதங்களுக்கான ஆதாரங்கள் இருப்பதாக தவெகவினர் தெரிவித்துள்ளனர். விசாரணையின்போது தவெக வழக்கறிஞர்கள் சமர்ப்பிக்கும் ஆதாரங்களை ஏற்றுக் கொள்வதும் மறுப்பதும் நீதிமன்றம் முடிவு செய்ய வேண்டியது.


மேலும், தேசிய ஜனநாயக கூட்டணியின் உண்மை அறியும் குழுவிடம் பெண்மணி ஒருவர், கூட்டத்தில் கத்திக்குத்து நடந்ததாகக் கூறியிருக்கிறார். இப்படி பல்வேறு குற்றச்சாட்டுகள் இருக்கையில், இவர் இப்போது ஊடகச் சந்திப்பு நடத்தி, அவை எல்லாம் வதந்தி என்று கூற வேண்டிய அவசியம் என்ன?

கூட்டம் நடந்த கரூர் வேலுசாமிபுரம், கூட்டம் நடைபெறத் தகுதியான இடமா என்பதை விசாரிக்க, திமுக அரசே ஒரு ஆணையம் அமைத்துள்ள நிலையில், அதைக் குறித்து செந்தில் பாலாஜி பேச வேண்டிய அவசியம் என்ன? கருத்துத் திணிப்பு ஏற்படுத்துவதன் நோக்கம் என்ன என்ற கேள்விகள் எழுகின்றன.

யார் எங்கே சென்றார்கள், செல்லவில்லை என்று கேட்கும் தகுதி முதலில் திமுகவிற்கு இருக்கிறதா? கள்ளக்குறிச்சியில், திமுக கள்ளச்சாராய வியாபாரிகளால் விற்கப்பட்ட கள்ள ச்சாராயம், 66 உயிர்களைப் பலிகொண்ட போது அங்கு போகாத முதலமைச்சர், தென்மாவட்டங்கள் பெருமழையால் பாதிக்கப்பட்டபோது, அங்கு சென்று மக்களைச் சந்திக்காமல், இந்தி கூட்டணி உடன்பாடுகளுக்கு டெல்லி சென்ற முதலமைச்சர், தற்போது மட்டும் ஓடோடி வந்ததன் பின்னணியை மக்கள் அறிவார்கள்.

நீதிமன்றமும், விசாரணை ஆணையமும் விசாரணை நடத்திக் கொண்டிருக்கையில், முன்னாள் சாராய அமைச்சர் இத்தனை பதட்டப்படுவதுதான் பலத்த சந்தேகங்களை எழுப்புகிறது” என்று அண்ணாமலை தெரிவித்துள்ளார்.

## திமுக ஆட்சியில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் 61% அதிகரிப்பு: அன்புமணி



சென்னை, அக்.03-

திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 60.66% அதிகரித்திருக்கிறது. தமிழ்நாட்டை குழந்தைகள் பாதுகாப்பாக வாழ்வதற்கு தகுதியற்ற மாநிலமாக மாற்றியது தான் திமுக அரசின் சாதனை. இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும் என பாமக தலைவர் அன்புமணி ராமதாஸ் தெரிவித்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில், “தமிழ்நாட்டில் 2023 ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை இதுவரை இல்லாத வகையில் 6968 ஆக அதிகரித்திருப்பதாகவும், 2023ஆம் ஆண்டில் மட்டும் 67 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர் என்றும் தேசிய குற்ற ஆவணக் காப்பகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. குழந்தைகள் வாழத்தகுதியற்ற மாநிலமாக தமிழ்நாட்டை திமுக அரசு மாற்றியிருப்பது கண்டிக்கத்தக்கது.

திமுக ஆட்சிக்கு வருவதற்கு முன் அதிமுக ஆட்சியில் 2020ஆம் ஆண்டில் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களின் எண்ணிக்கை 4338 ஆக இருந்தது. திமுக ஆட்சிக்கு வந்த பிறகு 2021ஆம் ஆண்டில் 6064 ஆகவும், 2022ஆம் ஆண்டில் 6580 ஆகவும், 2023ஆம் ஆண்டில் 6968 ஆகவும் அதிகரித்திருக்கிறது. அதிமுக ஆட்சியில் நடந்த குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுடன் ஒப்பிடும் போது திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் குற்றங்களின் எண்ணிக்கை 60.66% அதிகரித்திருக்கிறது.

2023ஆம் ஆண்டில் 67 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டுள்ளனர். அவர்களில் இருவர் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர். 2022ஆம் ஆண்டில் 81 குழந்தைகள், 2021 ஆம் ஆண்டில் 69 குழந்தைகள் என திமுக ஆட்சியில் மொத்தம் 217 குழந்தைகள் படுகொலை செய்யப்பட்டிருக்கின்றனர். திமுக ஆட்சியில் மொத்தம் 7 குழந்தைகள் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டு படுகொலை செய்யப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு வளர்ச்சியடைந்து விட்டது, சிசுக்கொலைகள் ஒழிக்கப்பட்டு விட்டன என ஆட்சியாளர்கள் பெருமிதப்பட்டுக் கொண்டிருக்கும் நிலையில், திமுக ஆட்சியின் முதல் 3 ஆண்டுகளில் 28 குழந்தைகள் சிசுக்கொலை செய்யப்பட்டுள்ளனர். திமுக ஆட்சிக்கு வந்த நாளில் இருந்தே பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு பாதுகாப்பில்லாத சூழல் ஏற்பட்டிருக்கிறது என்ற குற்றச்சாட்டு இந்த புள்ளிவிவரங்களின் மூலம் உறுதியாகியிருக்கிறது.

தமிழ்நாட்டின் அனைத்து மூலைகளிலும் மது மற்றும் கஞ்சா உள்ளிட்ட போதைப் பொருள்கள் தாராளமாக கிடைப்பது, குற்றங்களைத் தடுக்க வேண்டிய காவல்துறை செயலிழந்து தடுமாறுவது போன்றவை தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்கள் அதிகரிப்பதற்கு காரணம் ஆகும். இதற்கு காரணமான திமுக அரசு தான் குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களுக்கு பொறுப்பேற்க வேண்டும்.

குற்றங்களுக்கு குறித்த காலத்தில் தண்டனை வழங்கப்பட்டால் தான் குற்றம் செய்பவர்கள் திருந்துவார்கள். அந்த விஷயத்திலும் திமுக அரசு படுதோல்வி அடைந்து விட்டது. குழந்தைகளுக்கு எதிரான பாலியல் குற்றங்களை விசாரிப்பதற்கான தமிழக மாவட்டங்களில் 53 சிறப்பு நீதிமன்றங்கள் அமைக்கப்பட்டிருக்க வேண்டிய நிலையில், இதுவரை 20 நீதிமன்றங்கள் மட்டுமே அமைக்கப்பட்டுள்ளன. அதனால் 60% போக்சோ வழக்குகள் விசாரிக்கப்படாமல் முடங்கிக் கிடக்கின்றன.

தமிழ்நாட்டை குழந்தைகள் பாதுகாப்பாக வாழ்வதற்கு தகுதியற்ற மாநிலமாக மாற்றியது தான் திமுக அரசின் சாதனை ஆகும். இதற்காக ஆட்சியாளர்கள் வெட்கித் தலைகுனிய வேண்டும். தெய்வங்களாக போற்றப்பட வேண்டிய குழந்தைகளுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கத் தவறிய திமுக அரசுக்கு வரும் தேர்தலில் மக்கள் சரியான பாடம் புகட்டுவார்கள்” எனத் தெரிவித்துள்ளார்.

## இந்தியா சீனா இடையே மீண்டும் நேரடி விமான சேவை: அக்.26 முதல் தொடக்கம்

புதுடெல்லி, அக்.03-

இந்தியா சீனா இடையிலான நேரடி விமான சேவை வரும் அக்டோபர் 26 முதல் மீண்டும் தொடங்க உள்ளது.

சில தினங்களுக்கு முன்பு சீனாவின் தியான்ஜினில் நடந்த ஷாங்காய் ஒத்துழைப்பு மாநாட்டின் போது சீன அதிபர் ஜி ஜின்பிங்கை சந்தித்த பிரதமர் நரேந்திர மோடி இந்தியா சீனா இடையே நேரடி விமான சேவை விரைவில் தொடங்கும் என்று அறிவித்திருந்தார்.

இந்த நிலையில், இரு நாடுகளின் சிவில் விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கு இடையேயான தொடர் பேச்சுவார்த்தைகளைத் தொடர்ந்து, இந்த மாத இறுதிக்குள் நேரடி விமான சேவைகளை மீண்டும் தொடங்க இந்தியாவும் சீனாவும் ஒப்புக் கொண்டுள்ளன. இரு தரப்பு விமானப் போக்குவரத்து அதிகாரிகளுக்கும் இடையிலான இந்த பேச்சுவார்த்தைகள் இந்த ஆண்டு தொடக்கத்தில் இருந்து நடந்து வந்தன.

நேரடி விமான சேவையை மீண்டும் அமல்படுத்துவது மற்றும் திருத்தப்பட்ட விமான சேவை ஒப்பந்தத்தை இறுதி செய்வது குறித்து இதில் பேசப்பட்டன. இந்த அறிவிப்பை தொடர்ந்து, இண்டிகோ நிறுவனம், வரும் அக்டோபர் 26 முதல் கொல்கத்தாவிலிருந்து குவாங்சோவிற்கு தினமும், இடைவிடாத விமான சேவையை மீண்டும் தொடங்குவதாக அறிவித்துள்ளது. விரைவில் டெல்லிக்கும் குவாங்சோவிற்கும் இடையே நேரடி விமானங்களை இண்டிகோ அறிமுகப்படுத்த உள்ளதாக தெரிவித்துள்ளது.

கொரோனா பரவல் மற்றும் எல்லை பிரச்சினை காரணமாக இந்தியா சீனா இடையிலான நேரடி விமான சேவை ரத்து செய்யப்பட்ட நிலையில் நான்கு ஆண்டுகளுக்குப் பிறகு தற்போது மீண்டும் நேரடி விமான சேவை தொடங்க உள்ளது குறிப்பிடத்தக்கது,

# “தமிழகம் தலைகுனிந்து நிற்கிறது” கரூர் சம்பவத்தில் ஸ்டாலின் மீது பழனிசாமி சாடல்

தருமபுரி, அக்.03-

“தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார். ஆனால், இன்று தலைகுனிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். நாடே அதிர்ந்துவிட்டது” என்று கரூர் நெரிசல் சம்பவம் குறித்து தேர்தல் பிரச்சாரத்தில் அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பேசினார்.

தருமபுரியில் இன்று (அக்.2) மேற்கொண்ட பிரச்சாரத்தில் அவர் பேசியது: “கரூரில் செப்டம்பர் 27ம் நடந்த சம்பவத்தை நீங்களும் பார்த்திருப்பீர்கள். இந்த ஆட்சியாளர்கள் உரிய முறையில் பாதுகாப்பு கொடுத்திருந்தால் அந்த உயிர்களை பாதுகாத்திருக்கலாம். முறையான, சரியான பாதுகாப்பு இல்லாத காரணத்தினால் பெண்கள், குழந்தைகள் உட்பட 41 பேர் இறந்திருக்கிறார்கள். இதற்கெல்லாம் காரணம் யார்? இது மக்கள் கேட்கும் குரல்.

ஆளுங்கட்சிக்கு ஒரு நீதி, எதிர்க்கட்சிகளுக்கு ஒரு நீதியா? நாட்டு மக்களைக் காப்பாற்றும் பொறுப்பு அரசுக்கு இருக்கிறது. போராட்டம், ஆர்ப்பாட்டம், பொதுக்கூட்டம், பேரணி இதுக்கெல்லாம் பாதுகாப்புக் கொடுப்பது அரசின் கடமை. முதல்வரின் கையில்தான் காவல் துறை இருக்கிறது. சரியான முறையில் முதல்வர் உத்தரவிட்டிருந்தால், காவல் துறை சரியான முறையில் செயல்பட்டிருந்தால் பாதுகாப்புக் கொடுக்கப்பட்டிருந்தால், 41 உயிரை இழந்திருக்க வேண்டியதில்லை.

இன்னும் ஆழமாகப் பேசமுடியும். ஆனால் இந்த அரசாங்கம் ஒரு நபர் கமிஷன் அமைத்துள்ளனர், விசாரணை தொடங்கிவிட்டது. அதனால் மேலோட்டமாகத்தான் பேச முடியும். இவ்வளவு பிரச்சினை நடந்துவிட்டது. தமிழகத்தை தலைகுனிய விடமாட்டேன் என்று முதல்வர் ஸ்டாலின் சொன்னார். ஆனால் இன்று தலைகுனிந்து நிற்கும் காட்சியைப் பார்க்கிறோம். நாடே அதிர்ந்துவிட்டது.

இதுவரை எத்தனையோ அரசியல் கட்சிகள் பொதுக் கூட்டம் நடத்தியிருக்கிறது. எந்த ஒரு பொதுக்கூட்டத்திலும் இல்லாத அளவுக்கு 41 உயிர்கள் பறி போயிருக்கிறது என்று சொன்னால், இந்த அரசாங்கம் தான் பொறுப்பேற்க வேண்டும். ஆட்சி உங்கள் கையில் இருக்கிறது, ஆட்சியாளர்களைத்தான் கேட்க முடியும். யார் யார் மீதோ பழி சுமத்தி தப்பிக்கக் கூடாது. ஓர் அரசு எப்படி செயல்பட வேண்டும் என்பதை அறிந்துகொள்ள வேண்டும். இனியாவது பொதுக்கூட்டத்துக்கு முறையான பாதுகாப்பு தருவீர்கள் என்று எதிர்பார்க்கிறேன்.

நான் 163 தொகுதியில் மக்களை சந்தித்தேன், 5 முதல் 6 மாவட்டத்தில் தான் காவல் துறை பாதுகாப்பு கொடுத்தனர், மற்ற இடங்களில் நம்முடைய அதிமுக தொண்டர்கள், கூட்டணிக் கட்சித் தொண்டர்கள் தான் பாதுகாப்பு கொடுத்தனர்.

ஆளுங்கட்சி முதல்வர் கூட்டம் நடத்தினால், ஆளே இல்லாத பகுதியில்கூட காவலர்களை நிறுத்தி பாதுகாப்பு கொடுக்கிறீர்கள். அதை நான் வேண்டாம் என்று சொல்லவில்லை. ஆளே இல்லாத இடத்தில் பாதுகாப்புக் கொடுக்கும் முதலமைச்சர், ஆயிரக்கணக்கான பேர் இருக்கும் இடத்தில் ஏன் பாதுகாப்பு கொடுக்கவில்லை என்று மக்கள் கேட்கும் கேள்விக்கு முதல்வர் பதில் சொல்லியாக வேண்டும். இதற்கெல்லாம் பதில் சொல்வதற்கு மக்கள் 2026 தேர்தலை எதிர்பார்த்துக் காத்திருக்கிறார்கள், உங்களுக்குத் தகுந்த பதிலடி வழங்குவார்கள்.

அதுமட்டுமல்ல, ஸ்டாலின் மாடல் அரசு உயர் அதிகாரிகளை, செய்தியாளர்களை சந்தித்து இந்த ஆட்சியின் திட்டங்களைச் சொல்ல வேண்டும் என்று பணித்து, இந்த 10 நாட்களாக இந்த ஆட்சியில் என்னென்ன திட்டங்கள் என்று சொல்லி வருகிறார்கள். அது சொல்லலாம், ஆனால் கரூரில் நடந்த சம்பவத்தை எப்படி அரசு செயலாளர் சொல்ல முடியும்?

ஒரு நபர் கமிஷன் அமைத்துவிட்டு அரசு செயலாளர்களை வைத்து அரசியல் செய்ய வேண்டாம். உங்கள் துறையின் பணிகளை மட்டும் நீங்கள் செய்ய வேண்டும். அதை விட்டுவிட்டு அவர் எப்போது அங்கு சென்றார். இவர் ஏன் கையைக் காட்டவில்லை என்பதெல்லாம் உங்களுடைய பேச்சாக இருக்கக் கூடாது. இதெல்லாம் அதிமுக ஆட்சிக்கு வந்த பிறகு தோண்டியெடுத்து தவறான செயலில் ஈடுபடுகின்ற அதிகாரிகளை விடமாட்டேன்.

என்ன நினைத்துக்கொண்டிருக்கிறீர்கள்? மக்களின் வரிப்பணத்தில் தான் உங்களுக்கு சம்பளம் வழங்கப்படுகிறது. எனவே, நடுநிலையோடு நடந்துகொள்ள வேண்டும். இன்றைக்கு மக்கள் துயரத்தை எண்ணி துடித்துக் கொண்டிருக்கிறார்கள். மிகப் பெரிய துயர சம்பவத்தை நியாயப்படுத்தி பேசுவது எந்த விதத்தில் சரி? அரசியல்வாதிகள் தப்பித்துக்கொள்ள என்ன வேண்டுமானாலும் பேசலாம். ஆனால், அரசு அதிகாரிகள் நடுநிலையோடு செயல்பட வேண்டும், இதைத்தான் மக்கள் எதிர்பார்க்கிறார்கள். இந்த ஆட்சியிலும், அதிகாரிகளிடமும் அது கிடைக்காது.





சட்டம் ஒழுங்கு ஏடிஜிபி நடந்த சம்பவத்தை நியாயப்படுத்தி பேசுகிறார், நீங்க என்ன அரசியல்வாதியா? சட்டத்தைப் பாதுகாப்பது தான் உங்கள் பொறுப்பு. சரியான பாதுகாப்பு கொடுக்காததால் இத்தனை பேரை இன்றைக்கு நாம் இழந்திருக்கிறோம். கரூரில் ஒரு டிஎஸ்பி தலைமையில் விசாரணை நடக்கிறது, அப்படியிருக்கும்போது ஏடிஜிபி செய்தியாளர்களிடம் நியாயப்படுத்தி பேசினால், கீழே இருக்கும் அதிகாரி எப்படி நியாயமாக விசாரிப்பார்? இவை எல்லாமே நடந்த தவறை மறைப்பதற்கு அரசு நடத்தும் கண் துடைப்பு நாடகம்.

இவ்வளவு பிரச்சினை ஏற்பட்ட பிறகும் முதல்வர் ஸ்டாலின் திருந்தவில்லை. கூட்டத்தில் மயங்கி விழுந்த பெண்மணியைத் தூக்கிக்கொண்டு செல்கிறார்கள், தலை சாய்ந்து செல்கிறார்கள். இப்படி தமிழர்கள் தலை குனிந்த காட்சிகளைக் கண்டு அனைவரும் பதறிப்போயிருக்கிறார்கள், இதற்கு பதில் சொல்ல வேண்டியது முதல்வர் தானே?

ஒரு நபர் கமிஷன் அமைத்துள்ளீர்கள், எந்த தகவல் என்றாலும் அதை கமிஷனில் தான் கொடுக்க வேண்டும். அதிகாரிகள் மூலம், தன்னுடைய அதிகாரத்தை வைத்து உண்மை சம்பவத்தை மறைத்துவிடலாம் என்றால் நிச்சயமாக நடக்காது, மக்கள் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள் என்பதை உணரவேண்டும்.

கரூரில் இருக்கும் முன்னாள் அமைச்சர் ஏன் பதறுகிறார்? மடியில் கனமில்லை என்றால் வழியில் பயம் இருக்கக் கூடாது, ஆனால் முகத்தில் பயம் தெரிகிறது. அவர் பேச்சில் பயம் தெரிகிறது, மாறி மாறி அதிகாரிகள், முன்னாள் அமைச்சர் எல்லாம் உண்மையை மறைத்துப் பேசுகிறார்கள். இதற்கெல்லாம் தேர்தலில் மக்கள் தகுந்த பதிலடி கொடுப்பார்கள்.

பணத்தைக் கொடுத்து மக்களை விலைக்கு வாங்கிவிடலாம் என்று கரூர் எம்எல்ஏ நினைத்துக்கெ ாண்டிருக்கிறார். ஒருமுறை மக்கள் ஏமாந்துவிட்டார்கள், இனியும் மக்கள் ஏமாற மாட்டார்கள். உங்களுடைய போலிக் கொலுசு, போலி வாக்குறுதி இனி எடுபடாது.

அரவக்குறிச்சி இடைத்தேர்தலில் அங்குள்ள தாழ்த்தப்பட்ட மக்களுக்கு 3 சென்ட் இடம் தன்னுடைய சொந்தப் பணத்தில் வாங்கிக் கொடுப்பதாகவும், வீடுகட்டித் தருவதாகவும் 25 ஆயிரம் பேருக்கு வாக்குறுதி கொடுத்தார். அந்த வாக்குறுதி நிறைவேற்றப்பட வேண்டும். இன்றைய முதல்வர் அன்றைய எதிர்க்கட்சித் தலைவராக இருக்கும்போது பொதுக்கூட்டத்தில் பேசிய அத்தனையும் வெற்று அறிவிப்பு. அவற்றை எல்லாம் மாவட்ட மக்கள் ஞாபகம் வைத்திருக்கிறார்கள், எப்போது தேர்தல் வரும் என்று எதிர்பார்க்கிறார்கள். சரியான தண்டனை வழங்குவார்கள்.

துயர சம்பவம் நடந்துவிட்டது. முதல்வர் இரவோடு இரவாக வந்து ஆறுதல் சொன்னார். ரைட்டு. துணை முதல்வர் உல்லாசமாக வெளிநாடு போய்விட்டார். ஏன் இங்கே நாடு பத்தி எரிஞ்சிக்கிட்டு இருக்கு, நாட்டு மக்கள் பதறிக்கொண்டு இருக்கிறார்கள். உடனே தனி விமானம் பிடித்து வருகிறார், பார்த்தார், மீண்டும் விமானம் ஏறி போய்விட்டார். இவரெல்லாம் ஆண்டால் நாடு உருப்படியாக இருக்குமா? மக்கள் உயிரிழந்து துடிக்கும் நேரத்தில் கூட இவர்களுக்கு இரக்கம் இல்லை, உல்லாச சுற்றுப்பயணம் தான் முக்கியம். இவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை நாட்டு மக்கள் உணரவேண்டும்.

நெரிசலில் ஒரு துணை முதல்வர் இவ்வளவு பெரிய பிரச்சினை ஏற்படு ம்போது எங்கே இருக்க வேண்டும்? தமிழ்நாட்டில் இருந்து தேவையான உதவிகளை செய்துகொடுக்க வேண்டும். கூட்ட நெரிசலில் சிக்கியவர்கள், பாதிக்கப்பட்டவர்களுக்கு எப்படி சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதையெல்லாம் திட்டமிட்டு செயல்படுத்தி இருந்தால் ஒரு நல்ல துணை முதல்வர் என்று சொல்லலாம். ஆனால் அதையெல்லாம் கருணாநிதி குடும்பத்தில் எதிர்பார்க்க முடியாது.

யார் எப்படி இருந்தால் என்ன..? தன் குடும்பம் நன்றாகயிருக்க வேண்டும். மக்களை சுரண்டி உல்லாச வாழ்க்கை வாழ வேண்டும். இதுதான் ஆட்சியாளர்களின் குறிக்கோள். இனியாவது அரசியல் கட்சிகள் நடத்தும் கூட்டத்துக்கு முறையான பாதுகாப்பு கொடுங்கள், இந்தக் கட்சி, அந்தக் கட்சி என்று பிரித்துப் பார்க்காதீர்கள். தமிழ்நாட்டு மக்கள் அனைவரும் நம்முடைய சகோதர, சகோதரிகள். யார் இறந்தாலும் அது நம் குடும்ப இழப்பு என்பதை உணரவேண்டும். திமுக இன்னமும் உணர்ந்தபாடில்லை.

அவர்கள் கூட்டணியில் அங்கம் வகிக்கும் கட்சிகள் ஜால்ரா அடிக்கின்றன. திருமாவளவன் உண்மையில் மனசாட்சியோடு பேசுகிறாரா? 41 உயிர் போன நேரத்தில் ஏதேதோ குற்றச்சாட்டுகள் சொல்லி ஆட்சியாளர்களுக்கு தூபம் போடுவதை விட்டுவிடுங்கள்.

இதே திருமா திருச்சியில் மாநில மாநாடு நடத்தினார். அவரை எப்படியெல்லாம் அலைக்கழித்தார்கள் என்பதை அவரே கூறினார். இடது கம்யூனிஸ்ட் விழுப்புரத்தில் மாநாடு நடத்தினார்கள், முழுமையான அனுமதி கொடுக்கவில்லை என்பதை எல்லாம் மறந்துவிடாதீர்கள் உங்கள் கட்சிக்கும் இதே நிலை ஒருகாலத்தில் வந்தே தீரும் என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும்” என்று எடப்பாடி பழனிசாமி பேசினார்.

முன்னதாக, கரூரில் நடைபெற்ற தவெக கூட்டத்தில் நெரிசலில் சிக்கி உயிரிழந்த 41 பேருக்கு 2 நிமிடம் மவுன அஞ்சலி செலுத்துமாறு கூட்டத்தில் பங்கேற்றவர்களிடம் எடப்பாடி பழனிசாமி கேட்டுக்கொண்டார். அதன்படி அனைவரும் மவுன அஞ்சலி செலுத்தினர்.



## திருமுருகன் பூண்டி தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் சார்பில் மகாத்மா காந்தி 157 வது பிறந்த நாள் விழா

தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் கலைஞர்கள் சங்கம் திருமுருகன் பூண்டி கிளை சார்பில் 157 வது பிறந்த நாள் விழா, பூண்டி நகராட்சி முன்பு காந்தி சிலைக்கு மாலை அணிவித்து, உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சி நடைபெற்றது. இதில் தமுஎகச பூண்டி கிளை தலைவர் ஈஸ்வரன், பூண்டி கிளை செயலாளர் S.காமராஜ், 10 வது வார்டு உறுப்பினர் சுப்பிரமணியம், R.சிற்பி சண்முகம், S.பாலசுப்பிரமணியம், அருணாசலம், பேச்சிமுத்து, சக்கர வியூகம் பாண்டியன், அருள்ஜோதி மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

## ஊட்டியில் வாகன நெரிசல் தவிர்க்க புதிய உத்தரவு

ஊட்டி, அக்.03–

தொடர் விடுமுறை காரணமாக ஊட்டி நகருக்குள் போக்குவரத்து நெரிசலை தவிர்க்க சுற்றுலா பஸ்களை ஊட்டி நகருக்குள் அனுமதி இல்லை. சுற்றுலா மாவட்டமான நீலகிரிக்கு, தினசரி சுற்றுலா பயணிகள் வருகின்றனர். அதிலும் தொடர் விடுமுறை நாட்களில் தமிழகம் மட்டுமின்றி வெளிமாநில மற்றும் வெளிநாடுகளை சேர்ந்த சுற்றுலா பயணிகள் வருகை அதிகரிக்கும். கேரளா, கர்நாடக மாநிலங்களிலிருந்து சிறிய வாகனங்கள் தவிர, சுற்றுலா பஸ்களிலும் சுற்றுலா பயணிகள் வருகின்றனர். தொடர் விடுமுறை காரணமாக கடந்த 2 நாட்களாக சுற்றுலா பயணிகளின் வாகனங்கள் அதிகரித்துள்ளது. இதனால் முக்கிய நகரப்பகுதிகளில் போக்குவரத்து நெரிசல் ஏற்படுகிறது.

இந்நிலையில் கேரளா, கர்நாடகா மாநிலங்களிலிருந்து நீலகிரிக்கு வரும் சுற்றுலா வாகனங்களில், பஸ்களை தலைகுந்தா பகுதியில் நிறுத்த உத்தரவிடப்பட்டது. சுற்றுலா பயணிகள் அங்கிருந்து வேறு வாகனங்களில் ஊட்டி நகருக்குள் செல்லவும், சோதனை சாவடிகளில் இந்த தகவலை தெரிவித்து அனுமதியளிக்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனால் ஊட்டி நகருக்குள் போக்குவரத்து நெரிசல் குறைந்தாலும், சுற்றுலா பயணிகள் மன உளைச்சலுடன் வந்து செல்லும் நிலை ஏற்பட்டுள்ளது.



## அரியலூர் கோதண்ட ராமசாமி கோயில் தேரோட்ட விழாவில் திரளான பக்தர்கள் பங்கேற்பு

**அரியலூர், அக்.03–**

அரியலூரில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாடிலுள்ள ஆலந்துறையார் கோதண்ட ராமசாமி கோயிலில் 82 ஆண்டுகளுக்கு பிறகு தேரோட்ட விழா நடைபெற்றது. தேரோட்டத்தை ரொட்டி இந்து சமய அறநிலையத் துறை சார்பில் ரூ.15.50 லட்சம், பொதுமக்கள் சார்பில் ரூ.3.10 லட்சம் என மொத் தமாக ரூ.18.60 லட்சம் மதிப்பில் புதிய தேர் செய்யப்பட்டது. இதையடுத்து தேரோட்டம் நடத்த முடிவு செய்யப்பட்டு, அதற்கான பணிகள் நடைபெற்று வந்தன.

தொடர்ந்து தேரோட்டத்தை யொட்டி செப்.23ம் தேதி அரியலூர் கோதண்ட ராமசாமி கோயிலில் கொடியேற்றத்துடன் விழா தொடங்கியது. தொடர்ந்து நாள்தோறும் இரவு நேரங்களில் பல்வேறு வாகனங்களில் பெருமாள் எழுந்தருளும் வீதியுலா நடைபெற்றது. இவ்விழாவின் முக்கிய நிகழ்வான தேரோட்டம் இன்று (அக்.2) காலை நடைபெற்றது. இந்த தேரோட்டத்தில் போக்குவரத்து மற்றும் மின்சாரத் துறை அமைச்சர் எஸ்.எஸ்.சிவசங்கர், அரியலூர் மாவட்ட ஆட்சியர் ரத்தினசாமி, எம்எல்ஏ சின்னப்பா ஆகியோர் பொதுமக்களுடன் சேர்ந்து தேரை வடம் பிடித்து இழுத்தனர். இந்த தேரோட்டம் தேரடி பகுதியில் இருந்து புறப்பட்டு, மாதா கோயில், சத்திரம் வழியாக மீண்டும் தேரடிக்கு வந்தடைந்தது.

தேரில் ஆண்டாள், அலமேலுமங்கை உடன் பெருமாள் எழுந்தருளி பக்தர்களுக்கு அருள் பாலித்தார். இவ்விழாவில், கோயில் செயல் அலுவலர் சரவணன், ஆய்வாளர் சதீஸ்குமார், அரியலூர் நகர் மன்ற தலைவர் சாந்தி கலைவாணன், கோட்டாட்சியர் பிரேமி, வட்டாட்சியர் முத்து லெட்சுமி மற்றும் பொதுமக்கள், பக்தர்கள் திரளாக பங்கேற்று சாமி தரிசனம் செய்தனர்.

## மத்திய அரசு நிதி விடுவிப்பு: தனியார் பள்ளிகளில் மீண்டும் இலவச மாணவர் சேர்க்கை - பள்ளிக் கல்வித் துறை

சென்னை, அக்.03-

மத்திய அரசால் நிதி வழங்கப்பட்டதைத் தொடர்ந்து தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கை மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. ஏற்கெனவே சேர்க்கப்பட்டவர்களில் தகுதியான மாணவர்களை ஆர்டிஇ ஒதுக்கீட்டின்கீழ் பதிவு செய்வதற்காக 10 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. இலவச கட்டாயக் கல்வி உரிமைச் சட்டத்தின்படி(ஆர்டிஇ) தனியார் பள்ளிகளில் 25 சதவீத இடங்களில் ஏழைக் குழந்தைகள் சேர்க்கப்படுவார்கள். மாநிலம் முழுவதுள்ள 8 ஆயிரத்துக்கும் மேலான தனியார் பள்ளிகளில் சுமார் 1 லட்சம் இடங்கள் உள்ளன. இந்த திட்டத்தில் எல்கேஜி அல்லது ஒன்றாம் வகுப்பில் சேருபவர்கள் 8ம் வகுப்பு வரை கட்டணம் செலுத்தாமல் இலவசமாக படிக்கலாம். தமிழகத்தில் 2013ல் அமலான இந்த ஆர்டிஇ திட்டத்தின்கீழ் இதுவரை 4 லட்சம் குழந்தைகள் தனியார் பள்ளிகளில் படித்து வருகின்றனர்.

இதற்கிடையே தேசிய கல்விக் கொள்கையை தமிழகம் ஏற்க மறுப்பதால் பள்ளிக்கல்வித் துறை திட்டங்களுக்கான நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. அதில், ஆர்டிஇ திட்ட நிதியும் சுமார் ரூ.600 கோடி வரை வழங்கப்படவில்லை. இதன்காரணமாக நடப்பு கல்வியாண்டில் (2025 26) தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கையை தொடங்குவதற்கு தமிழக அரசு ஒப்புதல் வழங்கவில்லை.

இதனால் பெற்றோர்கள் பலர் தங்களின் சொந்த செலவில் பிள்ளைகளை தனியார் பள்ளிகளில் சேர்த்துவிடும் நிலை உருவானது. மேலும், ஏற்கெனவே சேர்க்கை பெற்ற குழந்தைகளை கல்விக் கட்டணம் செலுத்தவும் பள்ளி நிர்வாகங்கள் வற்புறுத்துவதாக குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில் இந்த விவகாரம் குறித்த வழக்கில் கல்வி உரிமைச் சட்டத்தின்படி மத்திய அரசு தனது பங்கு நிதியை மாநில அரசுக்கு வழங்க வேண்டுமென உயர்நீதிமன்றம் உத்தரவிட்டது. உச்ச நீதிமன்றமும் சில அறிவுறுத்தல்களை வழங்கியது. தொடர்ந்து ஆர்டிஇ திட்டத்தின் தனது பங்களிப்பு நிதியை மத்திய அரசு சமீபத்தில் விடுவித்தது. இதையடுத்து தனியார் பள்ளிகளில் இலவச சேர்க்கையானது மீண்டும் தொடங்கப்பட்டுள்ளது. அதன்படி ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மாணவர்களில் தகுதியானவர்களை ஆர்டிஇ ஒதுக்கீட்டில் பதிவு செய்வதற்காக 10 நாள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது.

இது குறித்து பள்ளிக்கல்வித் துறை செயலர் பி.சந்திரமோகன் வெளியிட்ட அறிவிப்பு விவரம்: தனியார் பள்ளிகளில் நடப்பு 2025-26ம் கல்வியாண்டுக்கான ஆர்டிஇ மாணவர் சேர்க்கை நடைமுறைகள் தற்போது தொடங்கப்பட்டுள்ளன. தற்போது குழந்தைகள் கல்வி பயிலும் அதே பள்ளியில் இந்த கல்வியாண்டுக்கான சேர்க்கை மேற்கொள்ளப்படும். ஏற்கெனவே சேர்க்கப்பட்ட மாணவர்களில் தகுதியானவர்களை அடையாளம் கண்டு ஆர்டிஇ ஒதுக்கீட்டின் கீழ் பள்ளியின் முதல்வர்கள் பதிவு செய்ய வேண்டும்.

இந்த திட்டத்தின்கீழ் வாய்ப்பு மறுக்கப்பட்ட மற்றும் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினர்களை தேர்வுசெய்ய வேண்டும். வாய்ப்பு மறுக்கப்பட்ட பிரிவில் வரும் ஆதரவற்றவர்கள், எச்ஐவி யால் பாதிக்க ப்பட்டவர், 3ம் பாலி னத்தவர், மாற்றுத்திறனாளிகள், துப்புரவுத் தொழிலாளர்களின் குழந்தைகள் ஆகியோருக்கு முன்னுரிமை வழங்க வேண்டும். நலிந்த பிரிவினர் ஆண்டு வருமானம் ரூ.2 லட்சத்துக்கு குறைவாக இருக்க வேண்டும். இடங்களைவிட விண்ணப்பங்கள் அதிகமானால் குலுக்கல் நடைமுறை பின்பற்றப்படும்.

அதேபோல், ஆர்டிகு தகுதியுடைய மாணவர்களிடம் எந்த கட்டணமும் வசூலிக்கக்கூடாது. ஏற்கெனவே கட்டணம் வசூலிக்கப்பட்டிருந்தால், 7 நாட்களுக்குள் திருப்பிச் செலுத்த வேண்டும். அந்தவகையில் பள்ளியின் நுழைவு வகுப்பில் இதுவரை சேர்க்கை பெற்ற குழந்தைகளின் மொத்த எண்ணிக்கையை அக்டோபர் 7ம் தேதிக்குள் பதிவேற்ற வேண்டும்.

அதில் ஆர்டிஇ சேர்க்கைக்கு தகுதியான மாணவர்களின் சான்றுகளை அக்.9ல் பதிவுசெய்ய வேண்டும். தொடர்ந்து தற்காலிக தகுதிப் பட்டியல் அக்டோபர் 10ம் தேதியும், இறுதிப்பட்டியல் அக்.14ம் தேதியும் வெளியிடப்படும். மேலும், இடங்களைவிட அதிக மாணவர்கள் இருப்பின் குலுக்கல் அக்டோபர் 16ல் நடத்தப்படும். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## “விஜய்யின் இதயத்தில் வலியோ, காயமோ இல்லை என்பது தெரிகிறது” சீமான்

**சென்னை, அக்.03–**

“தவெக தலைவர் விஜய் வீடியோவை பார்க்கும்போது அவரது இதயத்தில் வலியோ, காயமோ இல்லை என்பது தெரிகிறது. அப்படி, இருந்திருந்தால் அந்த மொழியில் வெளிப்பட்டிருக்கும்“ என நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் தெரிவித்துள்ளார்.

விருதுநகரில் நாம் தமிழர் கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளர் சீமான் செய்தியாளர்களிடம் பேசியதாவது: விஜய் சென்றதால்தான் அங்கு கூட்ட நெரிசல் ஏற்பட்டது. இதற்கு காரணம் யார்? ஆனால், அவர் இதயத்தில் வலியோ, காயமோ இல்லை. திரைப்படத்தின் வசனம் போல வீடியோவில் பேசியுள்ளார். இது நல்ல அணுகுமுறை இல்லை.

மற்ற இடத்தில் இல்லாமல் கரூரில் மட்டும் இப்படி நடந்தது எப்படி என விஜய் கேட்பது தவறு. மற்ற இடங்களிலும் இப்படி நடக்க வேண்டும் என அவர் நினைக்கிறாரா? கூட்டத்தில் கத்தியுடன் புகுந்தவர்கள் தாக்கினார்கள் என்று சொன்னார்கள். ஆனால், மருத்துவமனையில் இருக்கும் ஒருவருக்குக் கூட கத்திக் குத்து காயம் இல்லாதது எப்படி? நானே நேரில் சென்று பார்த்தேன். கரூர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த ஒருவருக்கு கூட கத்திக் குத்து காயம் இல்லை. விஜய்க்கு சுய சிந்தனை இருக்கிறது என்றால் எதற்கு அருகில் ஆள் இருக்க வேண்டும்?

வீடியோவில் பேசும்போது அவர் வலியை கடத்தி இருக்க வேண்டும், ஆனால் அவர் கடத்தவில்லை. சி.எம். சார் என்று கூப்பிடுவதே சின்ன பிள்ளைகள் விளையாட்டாக பேசுவதுபோல் இருக்கிறது. முதல்வர் மேல் அவருக்கு மரியாதை இல்லாமல் இருக்கலாம். ஆனால் அவர் இருக்கும் நாற்காலி பல தலைவர்கள் இருந்த இடம்” இவ்வாறு அவர் தெரிவித்தார். விஜய் இப்படி தான் பேசியிருக்க வேண்டும் என சீமான் பேசி காட்டியது குறிப்பிடத்தக்கது.



திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில்

## தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 157வது பிறந்த நாளை முன்னிட்டு திருஉருவச் சிலைகளுக்கு மாலை அணிவித்து மரியாதை

திருச்சி, அக்.03-


திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் தேசத்தந்தை மகாத்மா காந்தியின் 157வது பிறந்த நாள் மற்றும் பெருந்தலைவர் காமராஜர் நினைவு நாளை முன்னிட்டு அவர்களது திருஉருவச் சிலைகளுக்கு மாநகர் மாவட்ட தலைவர், மாமன்ற உறுப்பினர் எல். ரெக்ஸ் தலைமையில், மாவட்ட பொருளாளர் முரளி முன்னிலையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்வில் சிறும்பான்மை பிரிவு பேட்ரிக் ராஜ்குமார், மாமன்ற உறுப்பினர் சோபியா விமலாராணி, கோட்ட தலைவர்கள் பிரியங்கா பட்டேல், வெங்கடேஷ் காந்தி, பகதுர்ஷா, ராஜா டேனியல் ராய், அழகர், பாலு, சுப்ரமணியப்புரம் எட்வின், மலர் வெங்கடேஷ், கனகராஜ், மனித உரிமை பிரிவு ஆறுமுகம், எஸ்சி பிரிவு கலியபெருமாள், கலைபிரிவு அருள், அமைப்பு சாரா பிரிவு மகேந்திரன், ஆர்டிஐ பிரிவு கிளமெண்ட், இளைஞர் காங்கிரஸ் விஜய் பட்டேல், மகிளா காங்கிரஸ் அஞ்சு, கவிதா, விவசாய பிரிவு அண்ணாதுரை, ரீகன், வார்டு நிர்வாகிகள் பாண்டியன், பெரியசாமி, செல்வராஜ், செபாஸ்டின், கண்ணன், மும்தாஜ், சுல்தான் பாஷா, நூர் அகமது, இந்தியாஸ், ஆஸ்கர், இதிரிஷ், அமிருதின், ஜஹிர், முன்னா, ஜவகர், சண்முகம், அனந்த பத்தபநாதன், அஞ்சலி, பாண்டியன், டயானா, அமுதா, உமா, ஹகிம்,பூபாலன், ரவி, சிவா வைத்திய நாதன், கோகிலா, சம்பத், ரவி சுந்தரம், சாகுல் அமீது, வளன் ரோஸ் உள்ளிட்ட ஏராளமான நிர்வாகிகள் கலந்துக்கொண்டு மரியாதை செலுத்தினர்.



■ அண்ணல் காந்தியடிகள் அவர்களின் 157வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை மாவட்டம் மேலமாசி வீதி கதர் விற்பனை நிலையத்தில் அமைந்துள்ள அன்னாரது திருவுருவச் சிலைக்கு மாண்புமிகு வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் திரு.பி.மூர்த்தி மாலை அணிவித்து மரியாதை செய்து வரலாற்று புகைப்படங்ககளை பார்வையிட்டு குத்துவிளக்கேற்றி முதல் விற்பனையை துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே.பிரவீன்குமார் உடன் உள்ளார்.



■ திருச்சி மாவட்டம், தென்னூர் அருகிலுள்ள இராஜாஜி வித்யாலயா சீனியர் செகண்டரி பள்ளியில் விஜயதசமியை முன்னிட்டுபள்ளியின்தாளாளர் அரவிந்தநாயகி தலைமையில் குழந்தைகள் சேர்க்கை நடைபெற்றது . இந்நிகழ்வில் "அ ' "ஓம்" தமிழின் முதல் எழுத்தை குழந்தைகள் நெல்மணி மற்றும் அரிசியில் எழுதினர். பெற்றோர்கள் குழந்தைகளை ஆர்வமுடன் பள்ளிகளில் சேர்த்து மகிழ்ந்தனர். குழந்தைகளை ஆசிரியர்கள் அன்போடு வரவேற்று, வித்யா ஆரம்பம் எனும் முறையில் இறைவனை துதித்து குழந்தையின் கையை பிடித்து நெற்மணிகளில் தமிழ் மொழியின் முதல் எழுத்தான 'அ ' என்ற எழுத்து மற்றும் "ஓம்" எழுத வைத்து பள்ளியில் சேர்த்தனர்.



■ நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு அண்ணல் காந்தியடிகளின் 157 வது பிறந்த நாளை முன்னிட்டு திருச்சி தலைமை தபால் நிலையம் அருகில் உள்ள அண்ணல் காந்தியடிகளின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வில் மாவட்ட ஆட்சித்தலைவர் வே.சரவணன்,மாநகராட்சி மேயர் மு.அன்பழகன், மாநகராட்சி ஆணையர் லி.மதுபாலன், துறையூர் சட்டமன்ற உறுப்பினர்செ.ஸ்டாலின் குமார், மாவட்ட நகர் ஊரமைப்புக் குழு உறுப்பினர் க.வைரமணி, நகரப்பொறியாளர் சிவபாதம், மண்டல தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள், அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

## சின்னாளபட்டி அருகே கோட்டைப்பட்டி, கலிக்கம்பட்டி பகுதியில் சாந்தினி எனப்படும் சாமந்தி பூக்கள் பயிரிட்ட விவசாயிகள் களையெடுக்கும் பணி தீவிரம்

பூக்கள் பயிரிடப்பட்ட விவசாயிகள் மரிக்கொழுந்து, மருகு, துளசி செடிகளையும் பயிரிட்டுள்ளனர்

சின்னாளபட்டி, அக்.03-

சின்னாளபட்டி அருகே கோட்டைப்பட்டி, கலிக்கம்பட்டி பகுதியில் அமோகமாக விளைந்துள்ள சாமந்தி பூக்களின் இடையே வளர்ந்துள்ள களைச் செடிகளை களை எடுக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர். பூக்கள் மட்டும் பியிரிட்டு வந்த விவசாயிகள் தற்போது மருகு, மரிக்கொழுந்து, துளசி செடிகளையும் பயிரிட்டுள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், சின்னாளபட்டி அருகே உள்ள ஊத்துப்பட்டி, கலிக்கம்பட்டி, கோட்டைப்பட்டி, காமலாபுரம், பெருமாள்கோவில்பட்டி, ஜாதிக்கவுண்டன்பட்டி, தொப்பம்பட்டி, நடுப்பட்டி ஆகிய கிராமங்களில் விவசாயிகள் மல்லிகை, கனகாம்பரம், செண்டுபூ, செவ்வந்திப்பூ, ஜாதிமல்லி, காக்கரட்டான், கோழிக் கொண்டை, மருகு, சம்மங்கி, ரோஜா, பட்டுரோஜா, முல்லை உட்பட பூக்களை பயிரிடுவது வழக்கம். தற்போது செவ்வந்தி பூவில் சாந்தினி பூ எனப்படும் ஒட்டுரக ஹைபிரிட் இனத்தைச் சேர்ந்த பூக்களை பயிரிட்டு வருகின்றனர். கோட்டைப்பட்டி, கலிக்கம்பட்டி பகுதியில்; சாமந்திப் பூக்களை பயிரிட்ட விவசாயிகள் தற்போது தோட்டங்களில் பூக்களின் இடையே உள்ள களைச் செடிகளை அகற்றும் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர். பூச்செடிகளை மட்டும் பயிரிட்டு வந்த விவசாயிகள் மரிக்கொழுந்து, மருகு, துளசி ஆகிய பயிர்களை பயிரிட்டு வருவது குறிப்பிடதக்கது.



## தங்கம் வெள்ளி விலை நிலவரம்

**தங்கம் - 10950 வெள்ளி - 164**



► மதுரை மாவட்டம், மீனாட்சி பஜாரில் இயங்கி வந்த மொபைல் விற்பளை கடைகளில் தீ விபத்து ஏற்பட்டதை மாண்புமிகு தகவல் தொழில் நுட்பவியல் மற்றும் டிஜிட்டல் சேவைகள் துறை அமைச்சர் முனைவர் பழனிவேல் தியாகராஜன் பார்வையிட்டார். மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.கே.ஜே.பிரவீன்குமார் இ.ஆ.ப. அவர்கள், மாநகராட்சி ஆணையாளர் திருமதி.சித்ரா விஜயன் இ.ஆ.ப. அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.

## ஆட்டோவை பறிமுதல் செய்ததால் டிரைவர் தற்கொலை

திருச்சி, அக்.03-

திருச்சி மாவட்டம், உறையூர் டாக்கர் ரோடு செல்வமுத்து மாரியம்மன் கோவில் முதல் தெரு பகுதியைச் சேர்ந்தவர் அன்பழகன் வயது 23 இவர் ஒரு நிதி நிறுவனத்தில் வாடகை அடிப்படையில் ஒரு ஆட்டோவை ஓட்டி வந்தார்.

கடந்த ஐந்து மாதங்களாக ரூ.15000 வாடகை பாக்கி வைத்துள்ளார்.

இந்த நிலையில் உறையூர் கல்லறை மேட்டு தெரு பகுதியைச் சேர்ந்த விக்னேஷ் 32 ஹரி சுதன் மற்றும் தேவநாதபுரம் பகுதியைச் சேர்ந்த 17 வயது சிறுவன் ஆகிய மூன்று பேரும் சேர்ந்து அன்பழகனை திட்டிவிட்டு அங்கு வீட்டில் நிறுத்தி இருந்த ஆட்டோவை பறி முதல் செய்து எடுத்துச் சென்றனர். இதனால் மனம் உடைந்த அன்பழகன் அருகாமையில் உள்ள புனிதா என்ற பெண்ணுக்கு தகவல் தெரிவித்துவிட்டு, தூக்கு போட்டு தற்கொலை செய்தார். இதுகுறித்து உறையூர் போலீசார் வழக்கு பதிவு செய்து விக்னேஷ் மற்றும் சிறுவனை கைது செய்தனர்.

கைதான விக்னேஷ் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு ஜெயிலில் அடைக்கப்பட்டார். சிறுவன் காப்பகத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டார். மேலும் இந்த வழக்கில் ஹரி ஹரசுதனை தேடி வருகின்றனர்.



## எர்ரம்பட்டி கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ காளியம்மன் கோவில் புரட்டாசி மாத உற்சவ விழா

அலங்காநல்லூர், அக்.03-

மதுரை மாவட்டம் அலங்காநல்லூர் அருகே உள்ள எர்ரம்பட்டி கிராமம ந்தையில் அமைந்துள்ள ஸ்ரீ காளியம்மன், கோவில் புரட்டாசி மாத உற்சவ விழா நடைபெற்றது.இரண்டு நாட்கள் நடைபெற்ற இந்த திருவிழாவில் முதல் நாள் நிகழ்ச்சியாக நாட்டாமை வீட்டில் இருந்து காப்பு கட்டுதல் அதன் பின்னர் ராஜா ராணி ஆட்டம் நடைபெற்றது அன்று இரவு 1.00 மணியளவில் நாட்டாமை வீட்டில் இருந்து பூ பெட்டி மேளதாளத்துடன் அருகில் உள்ள சாத்தையார் ஓடையில் ஸ்ரீ காளியம்மன் கரகம் ஜோடித்து வான வேடிக்கை முழங்க சன்னதி வந்து அடைதல் அதன் பின்னர் கிராம இளைஞர்கள் சார்பாக அன்னதானமும் நடைபெற்றது. அதனைத் தொடர்ந்து முளைப்பாரி எடுத்தல், மாவி ளக்கு, தீச்சட்டி, பொங்கல் வைத்தல், கிடாய் வெட்டுதல், உள்ளிட்ட நேர்த்திக்கடன் செலுத்தும் நிகழ்ச்சியும் நடைபெற்றது.02.10.25. காலை 7.00 மணிக்கு மஞ்சள் நீராடல் 9.00 மணிக்கு முளைப்பாரி எடுத்து கம்மாக்கரை சென்றடைதல் உள்ளிட்ட நிகழ்ச்சிகளுடன் திருவிழா நிறைவு பெற்றது. இந்த திருவிழாவுக்கான ஏற்பாடுகளை எர்ரம்பட்டி கிராம பொதுமக்கள் செய்திருந்தனர்..



## திருப்பூரில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் மகாத்மா காந்தி சிலை முன்பு உறுதிமொழி ஏற்பு

திருப்பூர், அக்.03-

திருப்பூர் மாநகராட்சி முன்பாக அமைந்துள்ள மகாத்மா காந்தி அடிகளின் திருவுருவச் சிலைக்கு இன்று காலை 10:30 மணி அளவில் தமிழ்நாடு கலை இலக்கியப் பெருமன்றத்தின் சார்பில் மாலை அணிவித்து மரியாதையும் மற்றும் உறுதிமொழி ஏற்கும் நிகழ்ச்சியும் நடைபெற்றது. இந்நிகழ்வில் தமிழ்நாடு கலை இலக்கிய பெருமன்ற மாவட்டத் தலைவர் பி.ஆர்.நடராஜன், மாவட்ட செயலாளர் ஏ.வி. பழனிச்சாமி, மாநிலத் துணைச் செயலாளர் த.சசிகலா, ஆசிரியர்கள் மேரி நிர்மலா, மேரி ரோஸ்லின், பி.சி.ராஜேந்திரன் மற்றும் தமிழரசி உள்ளிட்ட முக்கிய நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## இம்மாத இறுதியில் இந்தியா சீனா இடையே நேரடி விமான சேவை தொடங்கும்: வெளியுறவுத்துறை அறிவிப்பு

டெல்லி, அக்.03-

இம்மாத இறுதியில் இந்தியா சீனா இடையே நேரடி விமான சேவை தொடங்கும் என வெளியுறவுத்துறை அறிவித்துள்ளது. இருதரப்பு உறவு, இருநாட்டு மக்களிடையே தொடர்பை வலுப்படுத்த விமான சேவை உதவும் என நம்பிக்கை தெரிவித்துள்ளது. இந்தியா சீனா அதிகாரிகளுக்கு இடையிலான ஆலோசனைக்கு பிறகு விமான சேவை தொடங்குவது குறித்து அறிவிப்பு




■ திண்டுக்கல் மாநகராட்சி அண்ணா வணிக வளாகத்தில் அமைந்துள்ள கதர் அங்காடியில் அண்ணல் காந்தியடிகளின் பிறந்தநாள் விழா மற்றும் தீபாவளி சிறப்பு விற்பனை துவக்க விழாவை முன்னிட்டு மாவட்ட ஆட்சித் தலைவர் திரு.செ.சரவணன், அண்ணல் காந்தியடிகளின் திருவுருவப்படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தி, குத்துவிளக்கேற்றி, தீபாவளி சிறப்பு தள்ளுபடி முதல் விற்பனையை வாடிக்கையாளருக்கு வழங்கினார்.அருகில் தமிழ்நாடு கதர் கிராமத் தொழில் வாரியம் உதவி இயக்குநர் திரு.கா.அருள்செல்வன், திண்டுக்கல் மேற்கு வட்டாட்சியர் திரு.ஜெயபிரகாஷ் உட்பட பலர் உள்ளனர்.

SAKKRA VIYUGAM owned and published by PAL PANDIAN, printed at SHANLAX PRESS 66, VP COMPLEX, TPK MAIN ROAD, VASANTHA NAGAR, MADURAI-625003, Published at 70/53 A1, THILAGAR NAGAR 1ST STREET, ANUPPARPALAYAM, TIRUPPUR, TAMIL NADU-641652 Editor: PAL PANDIAN Phone : 88705 00000